**<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>**

**<u>OS – 152/2025</u>**

நாள் 24.02.2026

DW1 – வெங்கடாசலம்

த/பெ – பழனிச்சாமி கவுண்டர்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24th day of February 2026)**

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. நான் இந்த வழக்கில் 1–ம் பிரதிவாதி. 2–ம் பிரதிவாதி எனது தாயார். 3–ம் பிரதிவாதி எனது தாய்மாமன் ஆவார். இந்த வழக்கின் வாதி எனது உடன்பிறந்த சகோதரர். எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் முழுவதையும் எனது எதிர்வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது எதிர்வழக்குரை பாரா 3–ல் எல்லோரும் கடினமாக உழைத்து பல சொத்துக்களை கிரையம் பெற்றதாக குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால், எனது பிரமாண வாக்குமூலத்தில் பாரா 13–ல் நானும், எனது தாயாரும் கடினமாக உழைத்து வந்த பணத்தை கொண்டு திருப்பூர் போயம்பாளையத்தில் 5–1/2 சென்ட் மனையை கிரையம் வாங்கியதாக முன்னுக்கு பின் முரணாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், அந்த சொத்து குடும்ப கடனுக்காக வேண்டி 2000–ம் ஆண்டு மார்ச் மாதத்தில் விற்று விட்டோம். அந்த 5–1/2 சென்ட் சொத்தை நானும், வாதியும் சேர்ந்து தான் வாங்கினோம் என்றால் சரிதான்.

2. எனது எதிர்வழக்குரை பாரா 6–ல் சொல்லப்பட்டுள்ள இன்னும் கொடுக்க வேண்டிய கடன் தொகையான ரூ.4,01,000/–ல் சரிபாதி ரூ.2,00,500/–ஐ செலுத்திடும் பட்சத்தில் சொத்தில் பாகம் கோர உரிமை

உள்ளது என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்துக்களில் பாகம் கோர வாதிக்கு உரிமை உண்டு என்றால் சரிதான், அதேபோல் நிலுவை கடன் தொகையையும் செலுத்த வாதி கடமைப்பட்டுள்ளார். நான் சொல்லும் கடன்காரர்களில் ஒருவர் தான் அ.வ.எண்.48/2017 வழக்கின் வாதி மகாலிங்கம் என்றால் சரிதான். அந்த அ.வ.எண்.48/2017 வழக்கின் தாவா கிரைய ஒப்பந்தத்தில் உள்ள சண்முகம் என்ற கையெழுத்து இந்த வழக்கின் வாதி சண்முகத்தின் கையெழுத்து இல்லை என்று கையெழுத்து நிபுணரிடம் இருந்து அறிக்கை பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான், அதில் உள்ள என்னுடைய கையெழுத்தும் என்னுடையதல்ல. அந்த வழக்கில் இந்த வழக்கின் வாதி சண்முகம் மேற்படி மகாலிங்கம் என்பவர் அவருக்கு யாரென்றே தெரியாது என்று எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. அந்த மகாலிங்கத்திடம் இருந்து நாங்கள் கடனை வாங்கியதாக சொல்வது பொய் என்றும், நான் சொல்வது போல வாதி எந்த காலத்திலும் மகாலிங்கத்திடம் கடன் வாங்கியது கிடையாது என்று சொன்னால் சரியல்ல.

3. எனது அப்பா பழனிச்சாமி இறக்கும் வரையில் பாத்திர பட்டறை முழுக்கூலி உற்பத்தி செய்து வந்தார். எனது அப்பா இறந்த பிறகு அவர் செய்து வந்த வேலையை நானும், வாதியும் சேர்ந்து செய்து வந்தோம் என்று சொன்னால் சரிதான், வாதி எனக்கு உதவியாக இருந்து வந்தார். TN 39 A 7171 என்ற மினி லாரியில் பதிவுச்சான்றிதழ் வாதியின் பெயர் தான் உள்ளது என்றால் சரிதான். அவர் அந்த மினி லாரியை தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்தில் வாதி கடன் பெற்று தான் வாங்கினார் என்றால் சரிதான், அந்த கடனுக்கு நானும், 3-ம் பிரதிவாதி ஆறுமுகம் என்பவரும் சேர்ந்து இரண்டு சொத்துக்களை அடமானம் கொடுத்தோம். அந்த

கடனுக்காக வேண்டி வைப்பீடு தொகையாக ரூ.1,03,388/—ஐ நான் செலுத்தியதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. அந்த கடனை வாதி பெற்று பின்பு அவருடைய வருமானத்தில் அந்த கடனை திருப்பி செலுத்தி விட்டார் என்றால் அது எனக்கு தெரியாது. அது வாதிக்கு தான் தெரியும். நான் TN 39 A 2034 என்ற மினி லாரி வாங்குவதற்காக வேண்டி ரூ.46,000/—ஐ வெளிநபரிடமிருந்து வாங்கி வந்து கொடுத்ததாக சொல்வதற்கு ஆவணம் ஏதேனும் உண்டா? என்றால் அக்ரிமெண்ட் பி.வா.சா.ஆ.8 ஆக தாக்கல் செய்துள்ளேன். பி.வா.சா.ஆ.8 அக்ரிமெண்ட்டில் வாதி சண்முகத்திடம் இருந்து தான் ரூ.46,000/—ஐ முன்பணமாக பெற்றதாக கண்டுள்ளது என்றால் சரிதான், அந்த பணத்தை நான் தான் கொடுத்தேன். அந்த அக்ரிமெண்ட்டில் நான் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். வாதி நடத்தி வந்த லாரி தொழிலுக்கும், எனக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வாதி பெயரில் தான் லாரி வாங்கப்பட்டது, ஆனால், இருவரும் சேர்ந்து தான் லாரி தொழிலை செய்து வந்தோம். இரண்டு லாரிகளும் வாதி பெயரில் தான் பதிவு சான்று உள்ளது என்றால் சரிதான், நிர்வாக வசதிக்காக வேண்டி எனது தம்பி வாதி பெயரில் வாங்கப்பட்டது. வாதி மட்டும் தான் லாரி தொழிலை செய்து வந்தார் என்றும், அந்த லாரிகளுக்கும் எனக்கும் எவ்விதமான சம்பந்தமும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. அந்த லாரிகளை வாதி தான் அவரது பெயரில் தன்னிச்சையாக கடன் பெற்று அவரது தனிப்பட்ட வருமானத்தை கொண்டு தான் திருப்பி அடைத்தார் என்று சொன்னால் சரியல்ல, 3—ம் பிரதிவாதி ஆறுமுகத்திற்கு ஒரு சொத்தை விற்று வந்த பணத்தை கொண்டு தான் கடன் அடைக்கப்பட்டது. அவ்வாறு ஆறுமுகத்திடம் இருந்து கடன் வாங்கப்பட்டதாகவும், அந்த

கடனுக்காக சொத்தை ஆறுமுகத்திற்கு விற்றதாகவும் நான் சொல்வதை எனது எதிர்வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

4. எனது தம்பி வாதி 28.05.1969–ம் தேதியில் பிறந்தார் என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. எனது தம்பி பெயருக்கு கனரா வங்கியில் சேமிப்பு வங்கி கணக்கு எண்.5655 என்றும், அதற்கு பிறகு தான் எனது பெயரில் வங்கி கணக்கு எண்.5674 என்று கணக்கு துவங்கினோம். எனது பிரமாண வாக்குமூலத்தில் பாரா 6–ல் சொல்லப்பட்டுள்ள சர்வே எண்.154/3A சொத்தானது எனது சித்தப்பாவான சின்னசாமி, சுப்பிரமணி ஆகியோருக்கு சொந்தமான சொத்து. தாவா A அட்டவணை சொத்தானது அம்மாசை கவுண்டர் மற்றும் பெரியசாமி வகையறாவுக்கு பாத்தியப்பட்டது. தாவா A அட்டவணை சொத்தை நானும், எனது தாயாரும் மற்றும் வாதியும் சேர்ந்து கூட்டாக கிரையம் வாங்கிய சொத்து என்றால் சரிதான். அதனால், அந்த சொத்தில் வாதிக்கு பொதுவில் 1/3 பங்கு பாத்தியம் என்றால் சரிதான். தாவா B அட்டவணை சொத்தானது கடந்த 13.01.1995–ம் தேதியிட்ட பாகசாசனத்தின் படி எனக்கும், வாதிக்கும், எனது தாயாருக்கும் பாகமாக வந்த சொத்து என்றால் சரிதான். அதனால், தாவா B அட்டவணை சொத்து எங்களுடைய பூர்வீக சொத்து என்றால் எனது அப்பாவின் குடும்பத்தின் வழியாகவும், எனது அம்மாவின் குடும்பத்தின் வழியாகவும் சேர்ந்து வந்த சொத்து ஆகும். தாவா C அட்டவணை சொத்து எனக்கும், வாதிக்கும் மற்றும் எனது தாய் மாமா 3–ம் பிரதிவாதி ஆறுமுகத்திற்கும் கடந்த 28.05.1990–ம் தேதியிட்ட கிரைய பத்திரம் மூலம் கூட்டாக பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். இந்த பாக தாவா தாக்கல் செய்த தேதியான 24.07.2001–ம் தேதியில் சொத்துக்கள் பிரிக்கப்படாத

சொத்துக்களாக தான் இருந்தது என்றால் சரிதான். அவ்வாறு சொத்துக்கள் பிரிக்கப்படாத சொத்துக்களாக இருந்து வந்த நிலையில் எனது தாயார் அந்த சொத்துக்களை பொறுத்து தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைக்க உரிமை கிடையாது என்றால் சரியல்ல. அவ்வாறு எங்களுக்கு கூட்டாக பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து கறார் பாகப்பிரிவினை ஏற்படாத நிலையில் தாவா சொத்தின் ஒரு பகுதியை பொறுத்து எனது தாயார் மூலம் எனது பெயரில் 31.10.2001–ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தை இந்த வழக்கிற்கு பின்னிட்டு ஏற்படுத்தி கொண்டுள்ளது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல, அதை எனது தாயாரிடம் தான் கேட்க வேண்டும். எனது தாயார் இறந்துபோய்விட்ட நிலையில் தாவா A,B அட்டவணை சொத்துக்களில் எனக்கும், வாதிக்கும் சரிபாதி பங்கு பாத்தியம் உண்டு என்றால் சரியல்ல. அதேபோல், தாவா C அட்டவணை சொத்தில் வாதிக்கு பொதுவில் 1/3 பங்கு பாத்தியம் என்றால் சரிதான். வாதி தாவா சொத்தில் உள்ள வீட்டில் குடியிருந்து வருகிறார் என்பதற்கு குடும்ப அட்டை அந்த முகவரிக்கு வழங்கப்பட்டுள்ளது என்றால் தவறு.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேண்டி ஒத்திவைக்கப்படுகிறது)**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2026.02.24 10:03:41 -0200

**Subordinate Judge,**
**Avinashi.**